**ஏப்ரல் – 14**

# TNPSC துளிகள்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகத்தின் புத்தொழில் நிறுவனமான பிளக்ஸ்மார்ட், கனரக வாகனங்களுக்கான மின்சார வாகனங்களுக்கான விரைவான மின்னேற்றியினை உருவாக்கியுள்ளதோடு மேலும், இந்திய வாகன நுட்ப ஆராய்ச்சிக் கூட்டமைப்பிடமிருந்து இதற்கான முதன்மைச் சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதல் புத்தாக்கத் தொழில் நிறுவனமும் இதுவாகும்.
- பெங்களூவில் உள்ள கட்டணச் சேவை நுட்பம் சார்ந்த உள்கட்டமைப்புச் சேவை வழங்குநரான ஜஸ்பே (Juspay) என்ற நிறுவனமானது, 60 மில்லியன் டாலர் மதிப்பிலான நிதியைப் பெற்றதையடுத்து, 2025 ஆம் ஆண்டிற்கான இந்தியாவின் முதல் யூனிகார்ன் நிறுவனமாக மாறியுள்ளது.
- சீனாவைத் தவிர, இந்தியா மீது விதிக்கப்பட்ட 26% வரி உட்பட மற்ற நாடுகள் மீதான சுங்க வரி விதிப்பில் 90 நாள் இடைநிறுத்த காலத்தினை டொனால்ட் டிரம்ப் அறிவித்து உள்ளார்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சர்வதேச பறவைகள் மையம்




- கழுவேலி பறவைகள் சரணாலயத்திற்கு அருகிலுள்ள அகரம் காப்புக் காடுகள் வனப் பகுதியில் ஓர் அதிநவீனமான சர்வதேசப் பறவைகள் மையத்தினை நிறுவுவதற்கான திட்டத்தில் விழுப்புரம் வனப் பிரிவு செயல்பட்டு வருகிறது.
- முன்மொழியப்பட்ட சர்வதேச பறவைகள் மையத்தில் விழிப்புணர்வு மற்றும் செயல்

விளக்க மையம் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் கல்வி மையங்கள் இடம் பெற்றிருக்கும்.

- கழுவேலி ஏரியானது உப்புக்கள்ளி கடற்கழி (நீரோடை) மற்றும் எடையன்திட்டு கழி முகம் மூலம் வங்காள விரிகுடாவுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- மத்திய ஆசிய வலசைப் போக்கு வழத்தடத்தில் செல்லும் வலசை போகும் பறவைகள் இங்கு கூடு கட்டுவதற்காக வருகை தருகின்றன.
- இந்த ராம்சர் தளம் ஆனது தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய உவர் நீர் ஈரநிலமாகும்.

## இலங்கை அகதிகளுக்கான அடையாள அட்டைகள்




- தமிழ்நாடு அரசானது, இம்மாநிலத்தில் வசிக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் வைத்து இருக்கும் அடையாள அட்டைகளை மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதற்கான செல்லுபடியாகும் ஆவணமாக ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது.
- 19,600க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 57,300 இலங்கை அகதிகள் 103 மறுவாழ்வு முகாம்களிலும், தமிழ்நாடு முழுவதுமாக அமைந்துள்ள பல்வேறு சிறப்பு முகாமிலும் வசித்து வருகின்றனர்.
- ஓர் ஆய்வின்படி, அவர்களில் 45% பேர் இந்தியாவில் பிறந்தவர்கள் ஆவர்.
- அவர்களில் 41% பேர், 1988 மற்றும் 1991 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவிற்கு வந்திருந்தாலும், அவர்களில் 79% பேர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவிலேயே தங்கியுள்ளனர்.

# தேசியச் செய்திகள்

## தேசிய நீர்வழி விதிமுறைகள், 2025


- மத்திய அரசானது, 2025 ஆம் ஆண்டு தேசிய நீர்வழிகள் (படகுத் துறைகள் / படகு முனையங்களின் கட்டுமானம்) விதிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்தியாவின் தேசிய நீர்வழி வலையமைப்பில் உள்ள படகுத்துறைகள் மற்றும் படகு முனையங்களின் கட்டுமானம் மற்றும் செயல்பாட்டில் தனியார் நிறுவனங்கள்

முதலீடு செய்வதற்கான ஒரு கட்டமைப்பை இது வகுக்கிறது.

- ❖ தேசிய நீர்வழிகளில் உள்கட்டமைப்பு மேம்பாட்டில் தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்கு இந்திய உள்நாட்டு நீர்வழி ஆணையத்தினால் (IWAI) உருவாக்கப்பட்ட ஒரு பிரத்தியேக எண்ணிமத் தளத்தினையும் இது அறிமுகப்படுத்தியுள்ளது.





## பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு




- ❖ தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகள் ஆனது, பிறப்பு மற்றும் இறப்பு உள்ளிட்ட நிகழ்வுகளை 21 நாட்களுக்குள்ளாக தெரிவிக்க வேண்டும் என்று இந்தியத் தலைமைப் பதிவு (RGI) அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.
- ❖ 90% பிறப்பு அல்லது இறப்பு நிகழ்வுகள் இந்தியாவில் பதிவு செய்யப்படுகின்றன.
- ❖ இருப்பினும், பிறப்பு மற்றும் இறப்புகளை 100% பதிவு செய்யும் ஒரு இலக்கை இன்னும் இந்தியா அடையவில்லை.

- பிறப்பு மற்றும் இறப்புப் பதிவு (RBD) சட்டத்தின் 23(2) பிரிவின் படி, "எந்தவொரு பிறப்பு அல்லது இறப்பையும் பதிவு செய்வதில் ஒரு பதிவாளரின் அலட்சியம்" அபராதத்துடன் தண்டிக்கப்படக் கூடியதாகும்.
- 2023 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1969 ஆம் ஆண்டு RBD சட்டம் ஆனது, 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல் மத்திய அரசின் இணைய தளத்தில் அனைத்து பிறப்பு மற்றும் இறப்புகளையும் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குகிறது.
- 2023 ஆம் ஆண்டு அக்டோபர் 01 ஆம் தேதி முதல், பல்வேறு சேவைகளுக்காகப் பிறந்த தேதியினை நிரூபிப்பதற்கான ஒரே ஆவணம் எண்ணிமப் பிறப்புச் சான்றிதழ் ஆகும்.

## PMMY பற்றிய SBI அறிக்கை




- பீகாரில் அதிக எண்ணிக்கையிலான பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) பெண் தொழில்முனைவோர் (4.2 கோடி) உள்ளனர் என்ற ஒரு நிலையில் அதைத் தொடர்ந்து தமிழ்நாடு (4.0 கோடி) மற்றும் மேற்கு வங்காளம் (3.7 கோடி) ஆகிய மாநிலங்கள் இடம் பெற்றுள்ளன.
- மகாராஷ்டிராவில் வங்கிக் கணக்குகள் வைத்துள்ள மொத்த நபர்களில் பெண்களின் பங்கு (79 சதவீதம்) அதிகமாக உள்ளது, அதைத் தொடர்ந்து ஜார்க்கண்ட் (75 சதவீதம்) மற்றும் மேற்கு வங்காளம் (73 சதவீதம்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.
- கடந்த ஒன்பது நிதியாண்டுகளில் (2016 முதல் 2025 ஆம் நிதியாண்டு வரை), ஒரு பெண்ணுக்கு வழங்கப் படும் PMMY தொகையானது கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) 13 சதவீதம் அதிகரித்து 62,679 ரூபாயாக அதிகரித்துள்ளது.
- 52 கோடி PMMY கணக்குகளில் சுமார் பாதி எண்ணிக்கையானது பட்டியலிடப்பட்டச் சாதியினர் / பட்டியலிடப்பட்டப் பழங்குடியினர் மற்றும் இதரப் பிற்படுத்தப்பட்ட சமூக வகுப்பினரின் கணக்குகள் ஆகும்.
- கணக்கு வைத்துள்ள மொத்த நபர்களில் 68 சதவீதம் பேர் பெண் தொழில்முனைவோர், 11 சதவீதம் பேர் சிறுபான்மைக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.
- PMMY ஆனது, நுண் நிறுவனங்கள் மேம்பாடு மற்றும் மறுநிதியளிப்பு நிறுவனத்தின்

(MUDRA) கீழ் நுண் நிறுவனங்கள் தொடர்பான ஒரு மேம்பாடு மற்றும் மறுநிதியளிப்பு நடவடிக்கைகளுக்காக அமைக்கப்பட்டது.

- PMMY உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் நிறுவனங்களால் 20 லட்சம் ரூபாய் வரை சொத்துப் பிணையமில்லாத நிறுவனக் கடன் வழங்கப்படுவதை உறுதி செய்கிறது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-வங்காளதேசம் இடையிலான சரக்கு முனையம்




- துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களுக்குச் செல்லும் வழியில் இந்தியாவின் நிலச் சுங்க நிலையங்களைப் பயன்படுத்தி வங்காள தேசத்திலிருந்து மூன்றாம் நாடுகளுக்கு சரக்குகளை ஏற்றுமதி செய்ய வழி வகுத்த முக்கியப் பன்னாட்டுச் சரக்கு மையத்தின் செயல்பாட்டினை இந்தியா நிறுத்தியுள்ளது.
- இந்த மையமானது பூடான், நேபாளம் மற்றும் மியான்மர் போன்ற நாடுகளுக்கு வங்க தேசத்தினால் மேற்கொள்ளப்படும் ஏற்றுமதிக்கான சீரான வர்த்தகப் பாய்வுகளைச் செயல்படுத்தியது.
- இது 2020 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் இந்தியாவினால் வங்காளதேசத்திற்கு வழங்கப் பட்டது.
- உலக வர்த்தக அமைப்பின் விதிகளின்படி, குறிப்பாக 1994 ஆம் ஆண்டு கட்டண வீதங்கள் மற்றும் வணிகம் தொடர்பான பொது ஒப்பந்தத்தின் (GATT) Vவது பிரிவின் படி, WTO அமைப்பின் அனைத்து உறுப்பினர் நாடுகளும் நிலத்தினால் சூழப்பட்ட நாடுகளுக்குச் செல்லும் மற்றும் அந்தந்த நாடுகளிலிருந்து அனுப்பப் படும் பல்வேறு பொருட்களுக்குப் போக்குவரத்துச் சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் இரயில் என்ஜின் உற்பத்தி


- 2024-25 ஆம் நிதியாண்டில் பல்வேறு வகைகளில் 1,681 இரயில் என்ஜின்களை இந்தியா உற்பத்தி செய்துள்ளது.
- இது 2023-24 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 1,472 என்ஜின்களுடன் ஒப்பிடும் போது அதைவிட 209 என்ஜின்கள் அல்லது 19% அதிகமாகும்.
- இந்த மிகவும் அதிக எண்ணிக்கையிலான உற்பத்தி என்பது இந்தியாவின் என்ஜின் உற்பத்தியில் இதுவரையில் பதிவாகாத அளவிற்கு அதிகமாகும்.

- இது அமெரிக்கா, ஐரோப்பா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற பிராந்தியங்களின் மொத்த என்ஜின் உற்பத்தியை விட அதிகமாகும்.
- 2004 மற்றும் 2014 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், 470 என்ற தேசிய வருடாந்திரச் சராசரியுடன் இந்தியா மொத்தம் 4,695 என்ஜின்களை உற்பத்தி செய்தது.
- 2014 முதல் 2024 ஆம் காலக் கட்டத்தில் இது 917 ஆக உயர்ந்தது.




## சுற்றுச்சூழல் செய்திகள்

### தார் பாலைவனப் பசுமையாக்கம்




- இந்தியாவில் உள்ள தார் பாலைவனத்தின் பசுமையாக்கத்தில் கடந்த 20 ஆண்டுகளாக ஆண்டுதோறும் 38 சதவீத உயர்வுப் பதிவாகியுள்ளது.
- பருவமழை மற்றும் வேளாண் விரிவாக்கத்தில் பதிவான குறிப்பிடத்தக்க அதிகரிப்பே இதற்குக் காரணமாகும்.

- நிலத்தடி நீர் வளங்களும் தார் பாலைவனத்தின் தாவர வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்கியுள்ளன.
- கடந்த சில தசாப்தங்களில் மக்கள் தொகை, மழைப்பொழிவு மற்றும் தாவரங்களில் ஒரே நேரத்தில் அதிகரிப்பு பதிவான உலகின் ஒரே பாலைவனம் தார் பாலைவனம் ஆகும்.
- தார் பாலைவனப் பகுதியானது, உலகின் மிக அதிகமான மக்கள் தொகை அடர்த்தி கொண்ட பாலைவனத்தைக் கொண்டுள்ளது.
- இது வடமேற்கு இந்தியா (இராஜஸ்தான், குஜராத், பஞ்சாப் மற்றும் ஹரியானா) மற்றும் தென்கிழக்கு பாகிஸ்தான் முழுவதும் 200,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவி உள்ளது.
- 2001 மற்றும் 2023 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் பாலைவனத்தில் பதிவான மழைப் பொழிவு 64 சதவீதம் அதிகரித்துள்ளது.
- 1985 முதல் 2020 வரையிலான காலக்கட்டத்தில் தார் பாலைவனத்தில் நகர்ப்புறங்களில் 50 சதவீதம் முதல் 800 சதவீதம் வரை அதிகரிப்பு என்பது பதிவானது.

# மாநிலச் செய்திகள்

## ரோங்காலி பிஹு 2025





- ரோங்காலி பிஹு அல்லது சாத் பிஹு என்றும் அழைக்கப்படும் போஹாக் பிஹு, மிக முதன்மையாக அசாம் மற்றும் பிற வடகிழக்கு மாநிலங்களில் கொண்டாடப்படும் ஒரு பாரம்பரிய இந்தியத் திருவிழாவாகும்.
- இந்தக் கொண்டாட்டம் ஆனது அசாமியப் புத்தாண்டு, வசந்த காலத்தின் வருகை மற்றும் அறுவடை பருவத்தின் தொடக்கத்தை நினைவு கூர்கிறது.
- இது அசாமில் ஏழு நாட்கள் வரை கொண்டாடப்படுகிறது.
- மற்ற இரண்டு பிஹு பண்டிகைகளான கதி பிஹு மற்றும் மாக் பிஹு ஆகியவை முறையே அக்டோபர் மற்றும் ஜனவரி மாதங்களில் கொண்டாடப்படுகின்றன.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## தஹவ்வூர் ஹுசைன் ராணா

- இந்த வாரம் அமெரிக்காவால் நாடு கடத்தப்பட்ட தஹவ்வூர் ஹுசைன் ராணாவின் விசாரணைக்கு இந்தியா தயாராகி வருகிறது.

- பாகிஸ்தான் நாட்டின் வம்சாவளியைச் சேர்ந்த கனடா நாட்டவரான ராணா, முன்பு பாகிஸ்தான் இராணுவத்தில் மருத்துவராகப் பணியாற்றியவர் ஆவார்.
- 2008 ஆம் ஆண்டில் நடைபெற்ற மும்பை தீவிரவாதத் தாக்குதல்களில் சுமார் 160க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதில் ஈடுபட்டதாக அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.
- அமெரிக்காவில் நடைபெற்ற விசாரணையில் மும்பை தாக்குதல்களில் ராணா ஈடுபட வில்லை என்று கூறி அவர் குற்றவாளி அல்ல என்று கூறப்பட்டாலும், LeT என்ற அமைப்பு உடனான அவரது தொடர்புகள் மற்றும் கோபன்ஹேகன் சதியில் ஈடுபட்டதற்காக அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டார்.
- 2013 ஆம் ஆண்டில், ராணாவுக்கு 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது, ஆனால் 2020 ஆம் ஆண்டில் உடல்நலக் கோளாறுகள் காரணங்களுக்காக விடுவிக்கப் பட்டார்.
- இந்தியாவின் நாடு கடத்தல் கோரிக்கைக்குப் பிறகு அதே ஆண்டின் பிற்பகுதியில் அவர் மீண்டும் கைது செய்யப் பட்டார்.





# இதரச் செய்திகள்

## ஏர்டெல் நிறுவனத்தின் 2Africa pearls கடலடிக் கம்பிவட இணைப்பு

- பாரதி ஏர்டெல் நிறுவனமானது, 2Africa pearls என்ற கடலடிக் கம்பிவட இணைப்பு அமைப்பை இந்தியாவில் நிறுவ உள்ளது.
- இது நாட்டின் தகவல் தொடர்பு வலையமைப்பை ஆப்பிரிக்கா, ஐரோப்பா மற்றும் மத்தியக் கிழக்கு நாடுகளுடன் இணைக்கிறது.
- 2Africa pearls கம்பிவட அமைப்பானது இந்தியாவிற்கு 100 tbps (வினாடிக்கு எத்தனை டெராபிட்கள் என்ற அளவு) என்ற சர்வதேச இணைய இணைப்புத் திறனை வழங்கும்.
- கடலடிக் கம்பிவட இணைப்புகள் ஆனது, அகலப்பட்டை இணையச் சேவைகளுக்காக

உலக நாடுகளை ஒன்றோடொன்று இணைக்கும் ஒரு முக்கிய உள்கட்டமைப்பு ஆகும்.

- உலகம் முழுவதும் சுமார் 650 கடலடிக் கம்பி வட இணைய அமைப்புகள் உள்ளன அவற்றில் 570 செயல்பாட்டில் இருப்பதாக மதிப்பிடப் பட்டுள்ளது.
- ஏர்டெல் நிறுவனமானது, இந்தியாவில் 2Africa pearls கம்பிவடங்களை நிறுவுவதற்கான பங்குதார நிறுவனமாகும்.
- 2Africa கம்பிவட அமைப்பின் ஒரு பகுதியான 2Africa pearls ஆனது, நிறைவடையும் போது உலகின் மிக நீளமான கடலடி கம்பிவட அமைப்பாக இருக்கும்.
- இது ஆசியாவை மத்தியக் கிழக்கு நாடுகள் வழியாக ஆப்பிரிக்கா மற்றும் ஐரோப்பா ஆகியவற்றுடன் இணைக்கும் 45,000 கிலோமீட்டருக்கும் அதிகமான ஒரு பரப்பளவைக் கொண்டுள்ளது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★